பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 29 வெள்ளிக்கிழமை 15.12.2023 கதிர் 399

### பூநகரி சூரிய மின் உற்பத்தித் திட்டம்

# உச்சக் கட்ட ஊழல்

## எதிர்க் கட்சித் தலைவர் அறிக்கை

பூநகரி குள சூரிய மின்சக்தித் திட்டம் மின்சாரத்துறையில் இடம்பெற்ற உச்சக்கட்ட ஊழல் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ் சாட்டியுள்ளார். முறையான வெளிப்படையான கேள்வி கோரல்ஏதுமின்றிஇந்தத்திட்டம் இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பூநகரிக் குள சூரிய மின் உற்பத்தித் திட்டத்தின் கீழ் 700 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான 100 சதவீதமின்கலசேமிப்புஆற்றல் கொண்ட நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. ☞ 2

# இனி இது ரகசியம் அல்ல!

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் ஏற்கனவே நீதித்துறை அவமதிக்கப்பட்டி-ருக்கிறது. உள்ளூராட்சித்தேர்தல்கள்தொடர்பில் நீதிமன்றம்பிறப்பித்த கட்டளையைச் செயற்படுத்தாமல் விட்டதன் மூலம் நீதித்துறையின் மதிப்பை ரணில் செல்லாக்காசாக்கினார். இப்போது அவரது காலத்தில் நாடாளுமன்றத்தின் மதிப்பும் செல்லாக்காசாக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட்சபைவிவகாரத்தில், அதன் நிர்வாகத்தைமாற்றவேண்டும்என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றத்தில் உள்ள ஆளும் தரப்பு மற்றும் எதிர்க் கட்சிகள் என்று எல்லோரும் இணைந்தே இந்தத் தீர்மானத்தை ☞ 2

## பிரிட்டிஷ் இளவரசி ஆன் இலங்கைக்கு வருகிறார்

பிரித்தானிய இளவரசி ஆன் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

2024 ஜனவரி 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை அவர் நாட்டில் தங்கியிருப்பார் என்று அவ்வமைச்சு கூறியுள்ளது.

இது குறித்து வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இளவரசி ஆன், அவருடைய கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமொதி லோரன்ஸுடன் நாட்டிற்கு ☞ 2

## இலங்கையின் பொருளாதாரத்தை நினைத்தவுடன் மீட்டுவிட முடியாது

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

சரிவடைந்தபொருளாதாரத்தை நினைத்த மாத்திரத்தில்மீட்டெடுக்க முடியாதுஎன்பதேஉண்மையாகும். சரிவை சந்தித்துள்ளநாடுகளுடன் ஒப்பிடுகைளில்இலங்கை ஓரளவு விரைவாகவே மீண்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார்.

வரவுசெலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் அரசாங்கத்தின் ஸ்திர நிலையை மீண்டும்உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கடனுக்கான அனுமதி கிடைத்தமை முன்னோக்கிச் செல்வதற்கு வலுவாகஅமைந்துள்ளது.

அதனைத்தொடர்ந்து உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் நிதி உதவிகளும் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். இந்த கடனுக்கான அனுமதி கிடைக்காது என்று போலிப் பிரசாரங்கள் செய்யப்பட்டமை கவலைக்கிடமானது.

சரிவடைந்தநாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டமைத்து முன்னேற்றிச் செல்ல சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதைத்தவிர வேறு வழிமுறைகள்எவையும் இருக்கவில்லை. இந் நிலையில் ஏனைய கடன் வழங்குநர்கள் சர்வதேச நாணய நிதியத்தின்வரைவுக்குள் இலங்கை எவ்வாறு செயற்பட போகின்றது என்பது தொடர்பிலேயே அவதானம் செலுத்துக் கின்றனர்.

இவ்வாறான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் போது நாட்டு மக்கள் நெருக்கடிக்கு உள்ளனர் என்பதையும் நாம் ☞ 2

## இமயமலைப் பிரகடனத்துக்கும் எமக்கும் எந்த தொடர்புமில்லை

### நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவிப்பு

இமயமலை பிரகடனத்துக்கும் தமிழ் அரசுக்கும் இடையில் எந்தவிதத் தொடர்புமில்லை என அந்தக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு தனி நபரும்சமாதானமாகவும், கௌரவத்துடனும், நம்பிக்கையுடனும், எவ்வித பயமும் சந்தேகப்படுதலுமின்றி சமமான உரிமைகளை அனுபவித்து வாழக்கூடிய ஒரு இலங்கை உருவாக்கப்படவேண்டும் என்ற தொனிப்பொருளை மையப்படுத்திய 'இமயமலை' பிரகடனம் சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் மற்றும் உலகத் தமிழர் பேரவையின் என்பவற்றால் உருவாக்கப் பட்டுள்ளன. கடந்தவாரம் அது கண்டியில் வெளியிடப்பட்டது.அதுதொடர்பான கலந்துரையாடல்களில் அந்த அமைப்புக்கள் தற்போது ஈடுபட்டு வருகின்றன.

இமயமலைப்பிரகடனத்தை முற்றாக நிராகரித்தும், உலகத்தமிழர் பேரவையின் செயற்பாட்டைக் கண்டித்தும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானகஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்துத் தெரிவித்திருந்தார். அதில் உலகத் தமிழர் பேரவை என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்நீட்சிதான்என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

இக்குற்றச்சாட்டு தொடர்பில் வினவியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு ☞ 2

## அடுத்த தசாப்தத்திற்கு ஏற்றவாறு ராணுவத்தை தயாராக்கவேண்டும்

### ஜனாதிபதி ரணில் நேற்று உரை

அடுத்த தசாப்தத்திற்குஏற்றவாறுஇராணுவத்தை தயார்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, உலக சவால்களை வெற்றிக் கொள்ளக்கூடிய இராணுவத்தினரை உருவாக்க பாதுகாப்புதுறையினரை புதிய தெரிவுகளுடன் கூடியவர்களாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சர்வதேசஅளவிலான முப்படைச்செயற்பாடுகள் தொடர்பில் பார்க்கும் போது இவ்வருட இறுதியில் உலகம் முழுவதும் உள்ளஆயுதபடையினர் முகம்கொடுக்கவிருக்கும் புதிய போக்குகள் தொடர்பில் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமெனவும்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

கொழும்புதாமரைத் தடாகஅரங்கத்தில்நேற்று நடைபெற்ற பாதுகாப்பு சேவைக் கட்டளைகள் மற்றும் பதவி நிலைக் கல்லூரியின் 17 ☞ 2

## 6 மில்லியன் முட்டைகள் இறக்குமதியாகி சந்தையில்

இறக்குமதி செய்யப்பட்ட 6 மில்லியன் முட்டைகள்மக்கள்பாவனைக்கு சந்தையில் விற்பனைசெய்யப்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதுகுறித்து அரச வர்த்தக இதர சட்டபூர்வ கூட்டுத்தாபனம்தெரிவித்துள்ளதாவது:

சந்தையில் முட்டையின்விலை60ரூபாவுக்கும்அதிகமாகஉயர்ந்துள்ளதாகநுகர்வோர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். இந் நிலையில், சதொச ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை கொள்வனவு செய்யும்வாய்ப்புள்ளது.

சந்தையில் முட்டையின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு அமைச்சரின் பணிப்புரைக்கு அமையஇந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

## விசாரணைக் குழு நியமனம்

வெலிகந்தகந்தக்காடு புனர்வாழ்வுநிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகள் தப்பிச்சென்ற சம்பவம் தொடர்பில் ஆராய, ஐவரடங்கியகுழு நியமிக்கப்பட்டுள்ளதாக, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம்மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சிதெரிவித்தார்.

இது தொடர்பில் மூன்று நாட்களுக்குள் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குழுவினருக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து தப்பிச்சென்ற கைதிகளில், மீண்டும் கைதான 129 பேரிடம் விசாரணை நடத்தப்படுகிறது. இவர்களிடம் பெறப்பட்ட தகவலின் பிரகாரம் ஒன்பது பேரை தேடும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன

## மருத்துவர்கள் போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு தேசிய கண் வைத்தியசாலை வைத்தியர்கள் ஆரம்பித்தஅடையாளப்பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர், வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவிக்கையில்,

சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் பாலித்த மஹிபாலவுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலை அடுத்து பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப் பட்டுள்ளது.

வைத்தியசாலை நிர்வாக அதிகாரியின் அசமந்தப்போக்கு தொடர்பில் சுகாதார அமைச்சு உரிய முறையில் பதிலளிக்கத்தவறியமையினால் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க ☞ 2

## குருநாகல் மாநகர முன்னாள் மேயர் உட்பட 5 பேருக்கு 3 வருடச் சிறை

### புவனேகபாகு அரசவையை இடித்த வழக்கில்

குருநாகல் நகரில் புவனேகபாகு அரசவையை இடித்து அழித்தமை தொடர்பான வழக்கில் முன்னாள் மாநகர சபை மேயர் துஷார சஞ்சீவ உள்ளிட்ட ஐவருக்கு 3 வருட சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது.

குருநாகல் மேல் நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணையை அடுத்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

குருநாகல் மாநகர சபை மேயர் துஷார சஞ்ஜீவ விதாரண, நகர ஆணையாளர் பிரதீப் நிஷாந்த திலகரத்ன, நகர பொறியியலாளர் சமிந்த பண்டார, பதில் அத்தியட்சகர் இலாலுடின் சுல்பிகார் மற்றும் பெக்கோ இயந்திரத்தை இயக்கியலக்ஷ்மன் ☞ 2

### சுகாதார சேவைக் கட்டமைப்பை வலுப்படுத்த

## 3.4 மில்லியன் டொலர் கடன் தந்தது உலக வங்கி

ஆரம்ப சுகாதார சேவை கட்டமைப்பை வலுவூட்டும் திட்டத்தின் கீழ், உலகவங்கியினால் 34மில்லியன்டொலர்கள் கடனுதவித்திறைசேறிக்கு வழங்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் திட்டப் பணிப்பாளர், வைத்தியர் ஜயசுந்தர பண்டார தெரிவிக்கையில்,

உலக வங்கியிடமிருந்து மேலும் 20 மில்லியன் டொலர் கடனுதவி கிடைக்கவுள்ளது. இந்ததிட்டத்தின் முடிவுகளை ஆராய்ந்ததன் பின்னர் இந்த நிதியை வழங்குவதற்கு உலக வங்கி தீர்மானித்துள்ளது.

2019ஆம் ஆண்டு முதல் ஆரம்ப சுகாதாரக் கட்டமைப்பை வலுவூட்டும் திட்டத்திற்காக உலக வங்கியிடமிருந்து இது வரை சுமார் 160 மில்லியன் டொலர்கள் கிடைத்துள்ளது. 20 மில்லியன் டொலர்கள்கடனுதவியை பெற்றுக்கொள்வதற்கு அடுத்த வருடம் ஜூன் 30 ஆம் திகதி வரை காலஅவகாசம்வழங்கப் பட்டுள்ளது என்றார்.

## இனி இது .....

நிறைவேற்றினர். ஜனாதிபதியும் அப்போது நாடாளுமன்றத்தில் இருந்தார். தீர்மானத்தை ஏற்றுக்கொண்டிருந்தார்.

ஆனால், நாடாளுமன்றத்தின் தீர்மானத்திற்கு மதிப்பளிக்காமல் கிரிக்கெட் சபையின் நிர்வாகம், ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களிடமே அதன் நிர்வாகம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியதற்காக அதையெல்லாம் செயற்படுத்த -முடியாது என்று புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் எடுத்தெறிந்து பேசுகின்றார்.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க பதவியில் இருந்தபோது இந்தப் பிரச்சினை பெரும் சர்ச்சையாக வெடித்திருந்தது. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி படுதோல்வியடைந்த நிலையில்அதற்குக்காரணம்ஊழல் நிறைந்த இந்த நிர்வாகமே என்று குற்றஞ்சாட்டப்படடது. அதனால் அந்த நிர்வாகத்தை பதவி நீக்கம் செய்துஅமைச்சர்வர்த்தமானிமூலம் அறிவித்தார். தொடர்ந்து இடைக்கால நிர்வாகம் ஒன்றையும் நியமித்தார். அதனால் அவர் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டார்.

புதிய அமைச்சராக ஹரின் பெர்னான்டோ பதவியேற்றுக்கொண்டார். இவர் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன்இணைந்துஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரானவர். முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான இவர், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதும் சஜித்தை விட்டுவிட்டு ஓடிவந்து ரணிலுடன் சேர்ந்துகொண்டவர். அவரிடமே விளையாட்டுத்துறை அமைச்சு ஒப்படைக்கப்பட்டது.

இப்போதுஅவர்நாடாளுமன்றத்தின் தீர்மானத்தைப் புறக்கணித்து முன்னாள் அமைச்சர் நியமித்த இடைக்கால நிர்வாகத்தைக் கலைத்துவிட்டுபழையபடிகிரிக்கெட் சபையிடமேநிர்வாகத்தை மீண்டும் ஒப்படைத்திருக்கின்றது.

ரணிலின் ஆட்சிக் காலம் முடிவதற்கு இதுபோன்று இன்னும் என்னென்ன கேலிக்கூத்தெல்லாம் பார்க்கப் போகின்றோமோ!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உச்சக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தோடு பூநகரி குளத்திலிருந்து கிளிநொச்சியிலுள்ள கிரிட் துணை மின் நிலையத்திற்கு நேரடியாக மின்சாரத்தைவழங்கும்விநியோகப் பாதையை நிர்மானிப்பதையும் உள்ளடக்கியுள்ளது இந்தத் திட்டம்.

இந்தத் திட்டம் தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விடுத்துள்ள சிறப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

700 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி நிலையம் மற்றும் 100% மின்கலச்சேமிப்புத் திறன் கொண்ட டிரான்ஸ்மிஷன் லைன்களை நிர்மானிக்கும்திட்டம்அமைச்சரவை ஒப்புதலுடன் யுனைடெட் சோலார் எனர்ஜி என்ற நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது, இத்தகைய திட்டம்ஒன்றைச்செயற்படுவதற்கான முன்னனுபவம் எதுவும் அந்த அந்த நிறுவனத்திற்குக் கிடையாது.

இந்த நிறுவனம் சூரிய மின் கலத் தொகுதிகள் விற்பனை மற்றும் விநியோகத்திலும் அதனோ-டு சார்ந்த செயற்பாடுகளிலும் மட்டுமே ஈடுபட்டு வந்துள்ளது. இப்படிப்பட்ட அனுபவமற்ற நிறுவத்திடம் இவ்வளவு பெரிய திட்டத்தை உலகில் வேறு எந்தவொரு நாடும் செய்ததில்லை. அந்தளவுக்கு எந்தவொரு அனுபவமும் இல்லாத நிறுவனம் இது.

இந்த நிறுவனத்திற்கு ஆஸ்திரேலியாவில் 400 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி நிலையம் ஒன்றைக் கொண்டுள்ளது. ஆனால் அதனை அமைத்துத் தந்தது பிரெஞ் நிறுவனம் ஒன்றே. மின்கலச் சேமிப்புமற்றும்விநியோகத்திட்டத;த இந்த நிறுவனம் எப்போதுமே செய்யப்படவில்லை. அத்தகைய ஒருநிறுவனத்திடமே இந்தத் திட்டம் கைளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த 782 ஏக்கர் நிலம் தேவை. 700 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய 700 சூரிய மின் கலங்களைப் பயன்படுத்த வேண்டும். அதற்கு இந்தளவு பெரிய நிலப்பரப்பு அவசியம். அவ்வளவு பெரிய பரப்பளவில் திட்டத்தை செயற்படுத்-தும் எந்த முன்னனுபவமும் இல்லாதது திட்டத்தை முன்னெடுக்கவுள்ள நிறுவனம். எனவே இது இலங்கையில்நிலத்தைஅபகரிக்கும் திட்டமா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகின்றது.

2022ஆம் ஆண்டு 16ஆம் இலக்க இலங்கை மின்சாரத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது, 10 மெகாவாட்டிற்கு மேல் இயங்கும்புதுப்பிக்கத்தக்கஎரிசக்தித் திட்டங்களுக்கு கேள்விப் பத்திர முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை முன்வைத்த போதிலும், ஆளும் தரப்பு அதனை நிராகரித்திருந்தது, இந்த ஒப்பந்தத்தின்மூலம்அதுஏன்என்பது வெளிப்பட்டுள்ளது. இவ்வாறான ஊழல் செயற்பாடுகள் தொடர்பில் நாம் அதிருப்தியடைந்துள்ளோம் - என்றார்.

## பிரிட்டிஷ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகை தரவுள்ளார்.

இலங்கைக்கும் பிரித்தானியாவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 75 ஆவது ஆண்டுப் பூர்த்தி விழாவில் பங்கேற்பதற்காகவே அவர்கள் இருவரும் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆவது பட்டமளிப்பு விழாவிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்புசேவைக்கட்டளைகள் மற்றும்பதவி நிலைக் கல்லூரியின் 17 ஆவது பட்டமளிப்பு விழாவில் உள்நாட்டு வெளிநாட்டு இராணுவ அதிகாரிகள் 148 பேருக்கு பட்டமளிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் வருகையை அடையாளப்படுத்தும் வகையில் பாதுகாப்பு கல்லூரியின் சார்பில் ஜனாதிபதிக்குநினைவுச்சின்னமொன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

அடுத்த தசாப்தத்திற்கு ஏற்றவாறு இராணுவத்தை தயார்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, வெளிநாட்டுகளின் பாதுகாப்பு துறை அதிகாரிகளை இலங்கையின் பாடநெறிகளுக்காக உள்வாங்குவதன் மூலம்பாதுகாப்பு கற்கைகளை நடைமுறைக்கு அமைவானதாக மாற்றக்கூடிய வாய்ப்பு உள்ளதெனவும் தெரிவித்தார்.

ஆசிய வலயத்தின் ஆயுத படையினர் சிறப்புத் திறன்களை கொண்டுள்ளனர் என்றும், அந்த திறன்களுடன் செயற்கை நுண்ணறிவு மற்றும் புதிய தொழில்நுட்பத்தையும் இணைப்பதால் நவீனமயமான பாதுகாப்பு படையொன்றைக் கட்டமைக்க முடியுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாதுகாப்பு உபாய மார்க்க விடயங்களை கற்பதற்கு கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், கெடட் பயிற்சிப் பாடசாலை மற்றும் பாதுகாப்புச் சேவைக் கட்டளைகள் மற்றும் பதவி நிலைக் கல்லூரி ஆகிய நிறுவணங்கள்மூன்றும்பெரும்பணி ஆற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்திற்கு இடையிலான மோதல்களின் அரசியல் நிலைமையை சுட்டிக் காட்டிய ஜனாதிபதி, உலகளவில் அனுதாபத்தை தேடிக்கொள்வதற்கான சில நாடுகளின் செயற்பாடுகள் தொடர்பிலும் விளக்கமளித்தார்.

தற்போதைய சர்வதேச மோதல்களை சில ஊடகங்கள் மக்கள் கருத்தாடல் வரையில் கொண்டுச் சென்றிருப்பதால் உலக மக்களின் பாதுகாப்புக்கு பாதகமான விளைவுகள் ஏற்படும் என்றும், பாரம்பரிய பாதுகாப்பு முறைமைகளிலிருந்து விடுபட்டு நிலவுகின்ற மோதல்களினால் மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

ஜனாதிபதியின்தேசியபாதுகாப்பு தொடர்பிலானசிரேஷ்டஆலோசகரும் பணிக்குழாம்பிரதானியுமானசாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன, பாதுகாப்புபதவி நிலைப் பிரதானி ஜெனரல்சவேந்திர சில்வா, இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத்தளபதிவைஸ்அத்மிரால் பிரியந்த பெரேரா, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, பாதுகாப்பு சேவைக் கட்டளைகள் மற்றும் பதவி நிலைக் கல்லூரியின் படைத் தளபதி ஜெனரல் பீ.கே.ஜீ.எம்.எல். ரொட்ரிகோ உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்தில் கொள்வோம். இருப்பினும் தற்போதைய சூழ்நிலையில் பிரசித்தமான தீர்மானங்களை மேற்கொள்ளமுடியாது. நெருக்கடிக்கு முகம் கொடுத்த காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமைத்துவத்தையும், நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்பையும் நாட்டு மக்களின் பொறுமையான அணுகுமுறையையும்நன்றியுடன் நினைவுக்கூரவேண்டும்.

தற்போது வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், ஆளும் தரப்பின் செயற்பாடுகளை வலுவாக முன்னெடுத்துச் செல்ல முடியும். அதனை விடுத்து அரசியல் ரீதியானபார்வையினால்எதனையும் சாதிக்க முடியாது.

கடந்த கால தவறுகள் தொடர்பில் பேசிக்கொண்டிருப்பதால் மாத்திரம் அவற்றை நிவர்த்திக்க மாற்று வழி கிடைக்காது. சர்வதேச நிதியத்துடனான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதலே எதிர்கட்சி அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்த ஆரம்பித்தது. அதற்கு மாறாக சிலர் தாம் பிரசித்தம் ஆவதற்காகவும் வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்தமை வருந்தற்குரியது.

அதேநேரம் வற் வரி விதிப்பு பணவீக்கத்தில் 2 சதவீத தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மறுமுனையில் வரிசெலுத்துவோர், செலுத்தாமல் இருப்போர் தொடர்பில் கவனம் செலுத்தி வரி வலையமைப்பை விஸ்தரிக்க எதிர்பார்த்துள்ளோம்.

கடன் மறுசீரமைப்புக்கு பின்னர் கடந்த காலத்தில் இடைநிறுத்தப்பட்ட பலதிட்டங்களை2024ஆம்ஆண்டில் மீளஆரம்பிக்கஎதிர்பார்த்துள்ளோம். அதேபோல் 2021 ஆம் ஆண்டு இறுதி முதல்2023 இறுதிகாலாண்டு வரையில் மறை பெறுமானத்தில் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சியை 2024 ஆம் ஆண்டில் நேர் பெறுமானத்திற்கு கொண்டுச் செல்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளோம்.

எதிர்கட்சியினர் கூறுவது போல இலகுவாக அவற்றை செய்ய முடியாது. அவ்வாறு அவர்களால் செய்ய முடியுமெனில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டின் ஜனாதிபதியாக பொறுப்பேற்கும் முன்னதாகஅவர்களுக்குஅதற்கான வாய்ப்பு காணப்பட்டது. மேலும் நாட்டிலுள்ள பொருளாதார மதிப்பீட்டு நிறுவனங்கள் சிலவும் பொருளாதார செயற்பாடுகள் தொடர்பில்உண்மைக்குப்புறம்பான தகவல்களை வெளியிடுவதை நிறுத்த வேண்டும்.

எமது செயற்பாடுகள் மீது நம்பிக்கை இருப்பதால் நாம் எதிர்க்கட்சியினரின் போலிப் பிரசாரங்களுக்கு ஒருபோதும் பதிலளிக்கவில்லை. ஆளும்தரப்பின் நிலைப்பாடு சரியானது என்பது சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவனைக்கான அனுமதி கிடைத்ததன் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் அரசியல், சமூக, பொருளாதாரநிலைத்தன்மை ஏற்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தியின் பலன்களும் படிப்படியாக கீழ் மட்டம் வரையில் சென்றடையும். இவ்வாறான நிலைமைக்குகைகொடுத்தசர்வதேச நாணய நிதியத்திற்கு நன்றி கூற வேண்டும்.

அதேநேரத்தில் சர்வதேச நாணய நிதியத்தினால் எவ்வித நிபந்தனைகளும் விதிக்கப்படவில்லை. மாறாக நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான வழிகாட்டல் வரைவையே மேற்படி நிதியம் வழங்கியுள்ளது. அதேபோல் 2023 - 2024 ஆம் ஆண்டுக்களுக்காக ஐஎம்எப்667மில்லியன்டொலர்களை அனுமதித்திருப்பதோடு உலகவங்கி 1300 மில்லியன் டொலர்களையும் ஆசிய அபிவிருத்தி வங்கி 1553 மில்லியன் டொலர்களையும் வழங்கவுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

வரவு செலவு திட்டம் தொடர்பில் ஒரு மாத காலமாக நாடாளுமன்றத்தில்நடைபெற்றவிவாதத்தில் எதிர்கட்சியினர்ஏற்றுக்கொள்ளக்கூடிய எந்தவொரு திருத்தத்தையும் முன்வைக்கவில்லை.மாறாகஆளும் தரப்பினர் மீதான விமர்சனங்களை மாத்திரமே முன்வைத்தமை கவலைக்கிடமானதாகும்.

எவ்வாறாயினும் சரிவடைந்த பொருளாதாரத்தை நினைத்த மாத்திரத்தில் மீட்டெடுக்க முடியாது என்பதே உண்மையாகும். சரிவை சந்தித்துள்ள நாடுகளுடன் ஒப்பிடுகைளில் இலங்கை ஓரளவு விரைவாகவேமீண்டுள்ளநிலையில், சர்வதேச நாணய நிதியத்தினால் அனுமதிக்கப்பட்ட இரண்டாவது தவணைக்கடன்தொகைவிரைவில் நாட்டுக்கு கிடைக்கும் என்றார்.

## மருத்துவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான விசாரணைகளை முன்னெடுத்து தேவையான நடவடிக்கைகளைஎடுப்பதற்குஅவர் உறுதியளித்துள்ள காரணத்தினால் அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பை கைவிடுவதற்கு தீர்மானித்தோம் என்றார்.

## குருநாகல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரியந்த ஆகிய ஐவருக்கே சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் நகர மத்தியில் அமைந்திருந்த இந்த தொன்மைவாய்ந்த கட்டடம், இரண்டாவது புவனேகபாகு மன்னரால் பயன்படுத்தப்பட்டதாக கருதப்படுகின்றது.

இவ்வாறான தொல்பொருள் முக்கியத்துவம்வாய்ந்தகட்டடத்தை இடித்த குற்றச்சாட்டில் குறித்த ஐவருக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## இமயமலைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப்பிரகடனத்தும்ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவுக்கும்எவ்வித தொடர்புமில்லை. அதேபோல் இதில் எமக்கும் எந்தவொரு தொடர்புமில்லை.

உலகத் தமிழர் பேரவையும், புத்தபிக்குகளும்இணைந்துநடத்திய பேச்சுவார்த்தைகளின் நீட்சியாக, அதனை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டதொருசெயற்திட்டமே இந்தப் பிரகடனமாகும்.

இதில் அதிகாரப்பகிர்வு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்கள் மிகமுக்கியமாக வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக 'ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப்பகிர்வு' என்ற சொற்பதம் புத்த பிக்குகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இதுபற்றி மகாநாயக்க தேரர்களுடன் கலந்துரையாடப்பட்டிருப்பதுடன் அவர்களும் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

எனவே அடுத்த கட்டமாக இப்பிரகடனம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பதிலேயே அதன் செயற்திறன் தங்கியுள்ளது.

அதேவேளை உலகத் தமிழர் பேரவைஎம்முடன்நடத்தியசந்திப்பில் கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் இப்பிரகடனத்தை வரவேற்று எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருந்தார். இவற்றுக்கு அப்பால் எமக்கு இதில் எவ்வித தொடர்புமில்லை என்றார்.



# கிழக்கில் இடைநிறுத்தப்பட்ட திட்டங்களை ஆசிய அபிவிருத்தி வங்கி நிறைவுறுத்தும்

## சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவிப்பு



கிழக்கு மாகாணத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ள கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டங்களை ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒத்துழைப்புடன் உடனடியாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஆசிய அபிவிருத்தி வங் கியின் அனுசரணையுடன் ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான கலந்துரையாடல் செவ்வாய்கிழமை செத்சிறிபாய வில் அமைந்துள்ள கிராமிய வீதி அபிவிருத்தி இரா ஜாங்க அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

இதன் போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன் போது அம்பாறை, திருகோணமலை மற் றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து துரிதமாக பணிகளை நிறைவு செய்யுமாறு வீதி அபிவிருத்தி த் திட்டத்தின் திட்டப் பணிப்பாளருக்கு இராஜாங்க அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

மேலும் பணிகள் நிறைவடைந்துள்ள வீதிகளில் வீதி அடையாளங்கள், பெயர் பலகைகளை நிறுவுதல், வீதிகளில் வெள்ளைக் கோடுகள் மற்றும் பாதசாரிகள் கடக்கும் அடையாளங்கள் போன்ற பணிகளை துரிதமாக முடிக்க செயற்திட்ட பொறியியலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (05)

# கல்முனை வலயக்கல்வி பணிமனைக்கு கல்முனை அதிபர்கள் சங்கம் பாராட்டு

இறுதியாக நடந்து முடிந்த க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் கல்முனை கல்வி வலயம் கிழக்கு மாகாணத்தில்இரண்டாம்இடத்தையும், அதேபோன்றுஅகிலஇலங்கைரீதியாக ஏழாம் இடத்தையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளதையிட்டு, கல்முனை அதிபர்கள் சங்கத்தின் தலைவர் இஸட் அஹமட்டும், செயலாளர், ஏ.ஜி.எம். றிசாத்தும் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீமுக்கும், அவர்களின் தலைமை த்துவத்தின் கீழ் பலசெயற்றிட்டங்களை வடிவமைத்து அவற்றை நெறிப்படுத்து-வதற்காக உதவி புரிந்து வரும் பிர திக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் வளவாளர்கள் அனைவருக்கும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

மேலும் அந்த அறிக்கையில் அவர்கள் குறிப்பிட்டவை வருமாறு -

விசேடமாக பாடசாலைகளில் இப் பெறுபேறுகளைப் பெறுவதற்காக அயராது உழைத்த அதிபர்கள் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளை களத்தில் நின்று மிக வினைதிறனாகக் கற்பித்த ஆசிரியர்களுக்கும்பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர். மேலும்எதிர்காலத்தி லும் நாம் தேசிய மட்டத்தில் முதலிடம் பெறுவதற்கு எமது வலயக்கல்வி பணிப்பாளரின் தலைமையில் செயற்பட சகல தரப்பினரும் முன் வர வேண்டுமென அந்த ஊடக அறிக்கையில் தெரிவித்தனர். (05)

# தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் ஜனாதிபதிக்கு விடுத்துள்ள கோரிக்கை



வற்வரிஅதிகரிப்புடன், ஜனவரி மாதத்தில் பஸ் கட்டணத்தில் தி ருத்தம்மேற்கொள்ளப்படலாம்என இலங்கை தனியார் பஸ் உரிமை யாளர்கள்சங்கம்தெரிவித்துள்ளது.

எனவே, இது தொடர்பாக எதிர்காலத்தில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தி ன் தலைவர் கெமுனு விஜேரத்ன, ஜனவரி மாதம் முதல் பஸ்கள் இறக்குமதியின் போது, சராசரியாக பஸ்ஒன்றின்விலைஒருகோடியே 57 லட்சமாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

வற் வரியின் 18 சதவீத அதி கரிப்புடன், குறைந்தபட்சம் 20 லட்சம் ரூபா விலையுடன் இந்த அதிகரிப்பு ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், உதிரிப்பாகங்களின் விலை, எண்ணெய் விலை, சேவைக் கட்டணங்கள் அனைத் தும் அதிகரிக்கின்றன என்றும்எரிபொருளின் மீது வற் வரி அறவிடப் படவுள்ளதாகவும்அவர் தெரிவித்தார்.

இதனால், டீசலின் விலையும் அதி கரிக்கும் என்பதால் மீண்டும் ஒருமுறை பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய நிலை உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனால், விரைவில் ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் இது தொடர்பாகக் கலந்துரைய-ாடவுள்ளதாகவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நிழற்படப் பிரிதி களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படும் என அகில இலங்கை தொடர்பாடல் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் சங்கமும் தெரிவித்துள்ளது.

வற் வரி அதிகரிப்பின் காரண மாக இந்த நிலை ஏற்படும் எனவும், இதனால், தாம் தொழில் நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிடும் எனவும் அச்சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

நிழற்படப் பிரிதிகளின் விலைகளில் அதிகரிப்பு ஏற்படும் நிலையில் அது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைப் பாதி க்கும் எனவும் அகில இலங்கை தொடர்பாடல் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (05)

# நாட்டில் ஆண்களுக்கு எதிராகவும் துஸ்பிரயோகங்கள் அதிகரிப்பு

நாட்டில் 10 வீதமான ஆண்களும் 90 வீதமான பெண்களும் வீடுகளில் பலவிதமான துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகுகின்றனர் என சுகாதார விசேட வைத்திய நிபுணர் நேதாஞ்சலி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் இடம்பெற்ற ஊடக சந்தி ப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

2022ஆம்ஆண்டுகுடும்பசுகாதார பணியகத்திற்கு சுமார் 10 ஆயிரத்தி ற்கும் அதிகமானோர் பல்வேறு பாதிப்புக்குள்ளாகி வருகின்றார்கள்.

இவ்வாறு அதிகமான பெண்களே வருகின்றார்கள். எமது தரவுகளின்படி 90 வீதமான பெண்களும் 10 வீத மான ஆண்களும் எமது நிலையத் திற்கு வருகின்றார்கள்.

உடல் ரீதியான துஸ்பிர யோகம், பாலியல்துஸ்பிரயோகம், பொருளாதார துஸ்பிரயோகம், உளவியல் துஸ்பிர யோகம் என பல்வேறு துஸ்பிரயோகத் திற்கு உள்ளாகி பாதிக்கப்பட்டவர்கள் வருகின்றார்கள்.

இவ்வாறு வீடுகளில் துஸ்பிரேகத் திற்க உள்ளாகுபவர்கள் உங்களுக்கு அருகிலுள்ள குடும்பசுகாதார பணியகத் திற்கு சென்று ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேநேரம் 070 2 611 111 எண்ணிற்கு அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்கலாம். அனைத்து ம ாகாணங்களையும் உள்ளடக்கி இந்த நிலையங்கள் காணப்படுகின்றன.

நாடளாவிய ரீதியிலும் அனைத்து விசேட நிபுணத்துவ வைத்தியசாலைகளிலும் இந்த நிலையம் ஒன்றை அமைப்பதே எமது நோக்கமாகும் என அவர் மே லும் குறிப்பிட்டுள்ளார். (05)

# அரசியல் கைதிகளுக்காகப் புலம்பெயர் அமைப்புகள் குரல் கொடுக்கவேண்டும்

## குரலற்றவர்களின் குரல் கோமகன் தெரிவிப்பு




'அரசியல் கைதிகளின் விடுதலைக்கு அனைத்து தரப்பினரும் குரல் கொடுக்க வேண்டும்'என குரலற்றவர்களின் குரல்' அமைப் பின் ஒருங்கி ணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும். அதற்காக புலம்பெயர் அமைப்புகள் தொடர்ச்சியாகக் குரல் கொடுக்க வேண்டும். அத்துடன் ஜனாதி பதியைச் சந்திக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச வேண்டும். - இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# மாதவனை பிரதேசத்தில் விசேட சுற்றிவளைப்புகள்



மட்டக்களப்பு, மய லத்தமடு, மாதவனை பிரதேசத்தில் கால் நடைகள் தொடர்ந்து தி ருடிவருவபர்கள் மற்றும் அவற்றை கொலை செய்பவர்களைக் கைது செய்வதற்கான விசேட சுற்றிவளைப்பு நட வடிக்கையொன்று மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இதனால், குறித்த பகுதியில் 50 பேர் கொண்ட பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு, ம யிலத்தமடு, மாதவனை மேச்சல் தரை பகுதியில் சட்டவிரோதமாகக் குடியேறிய வெரும்பான்மையின மக்கள் சேனைபயிர் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த சட்டவிரோத குடியேற்ற வாசிகளை அங்கிருந்து வெளிே-யற்றுமாறு கோரி கால்நடை வளர்ப்பு பண்ணையாளர் சங்கத்தினர், கடந்த 90 நாள்களாகத் தொடர்ச்சியா கக் கவனவீர்ப்பு;பு போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றமையும்குறிப்பிடத்த க்கது. (05)

# பற்றியெரிந்த வர்த்தக நிலையம்; யாழ். மீசாலையில் துயரசம்பவம்



யாழ். மீசாலை பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் புதள்கிழமை ஏற்பட்ட தீ விபத்தால் பெறுமதியான பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. குறித்த வர்த்தக நிலையத்தில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரண மாகவே இந்தத் தீவிபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீ விபத்தினையடுத்து அப்பகுதிக்கான மின் விநியோகமும் சுமார் ஒரு மணி நேரம் தடைப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தீ விபத்தையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் கொடிகாம பொலிஸார் தீவிர விசார ணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஒற்றுமையின் தேவை

இலங்கையின் 2024 வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிலையில், பன்னாட்டுநாணயநிதியம் (IMF) அதன் இரண்டாவது தவணையான 3 பில்லியன் அமெரிக்க டொலர் பிணை எடுப்புப் பொதிக்கு செவ்வாய்க்கிழமை அனுமதி வழங்கியது, இதன் பின்னர் நாட்டின் பொருளாதாரம் உறுதியடையும் என்ற பெரும் எதிர்பார்ப்பு உள்ளது.

தன்னால்மட்டுமே இந்துப்பிரச்சினையை இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு திறம்படக் கையாள முடிந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். ஆனால் அவரை அதிகாரத்தில் அமரவைத்திருக்கும் பொது ஜன பெரமுனவிற்குள் ரணிலின் நடவடிக்கைகள் குறித்துப் பல்வேறு கருத்து முரண்பாடுகள் உள்ளன. குறிப்பாக வரி அதிகரிப்புத் தொடர்பில் அதிருப்தி நிலவுகின்றது. இருந்தாலும் வரவு செலவுத் திட்டத்தை அவர்கள் பெரும்பான்மை மூலம் நிறைவேற்றியுள்ளார்கள்.

வரி அதிகரிப்பு ஏழை மக்களைத் தாண்டி நடுத்தர மக்களையும் அதிகம் பாதிக்கின்றது. அவர்களையும் ஏழைகளாக்குகின்றது. சத்தான உணவு, வீட்டுவசதி, கல்வி மற்றும் மருத்துவத் தேவைகள் தொடர்பான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போராடும் கீழ் மற்றும் நடுத்தர வர்க்க மக்களை ஆளும் தரப்பின் உதவிகள் சென்றடைய வேண்டும் என்பதே முக்கியக் காரணியாகும். ஜனாதிபதியும் ஆட்சியாளர்களும் வறுமை ஒழிப்புக்கு அதிக முன்னுரிமை வழங்க வேண்டும்,

மார்கழி 20 அன்று, ஐக்கிய நாடுகள் சபையின் உலக மனித ஒற்றுமை தினத்தைக் குறிக்கிறது. ஓர் அறிக்கையில், ஐநா கூறுகிறது, நிலையான வளர்ச்சி நிகழ்ச்சி நிரல் என்பது மக்கள் மற்றும் நிலத்தை மையமாகக் கொண்டது, மனித உரிமைகளால் ஆதரிக்கப்படுகிறது. வறுமை, பசி மற்றும் நோயிலிருந்து மக்களை மீட்க உறுதியான உலகளாவிய கூட்டாண்மையால் ஆதரிக்கப்படுகிறது. இது உலகளாவிய ஒத்துழைப்பு மற்றும் ஒற்றுமையின் அடித்தளத்தில் கட்டமைக்கப்படும்.

ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கு ஒற்றுமை கலாச்சாரத்தை மேம்படுத்துதல் மற்றும் பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மை முக்கியம். வறுமையை ஒழிப்பதற்காக உலக ஒற்றுமை நிதியத்தை நிறுவுதல் மற்றும் சர்வதேச மனித ஒற்றுமை தினத்தை பிரகடனம் செய்தல் போன்ற முன்முயற்சிகள் மூலம், ஒற்றுமையின் கருத்து வறுமைக்கு எதிரான போராட்டத்தில் மிக முக்கியமாக வலியுறுத்தப்படுகின்றது.

'பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம் அல்லது மனிதாபிமானத் தன்மை கொண்ட சர்வதேச பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஒத்துழைப்பை' ஒற்றுமை என்று கருதிக்கொள்ள முடியும்.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச்செயலாளர் பான் கீ மூன் கூறுகையில், பருவநிலை மாற்றம் எல்லையை மதிக்காது; நீங்கள் யார் என்பதை அது மதிக்காது – பணக்காரர் அல்லது ஏழை, சிறியவர் அல்லது பெரியவர். எனவே, இதை நாம் 'உலகளாவிய சவால்கள்' என்று அழைக்கிறோம், இதனை எதிர்கொண்டு சமாளிக்க உலகளாவிய ஒற்றுமை தேவைப்படுகிறது.

உலகின் தலைசிறந்த அரசியல்வாதிகளில் ஒருவரான நெல்சன் மண்டேலா, நம் உலகில் வறுமை, அநீதி மற்றும் மோசமான சமத்துவமின்மை நீடிக்கும் வரை, நம்மில் எவரும் உண்மையிலேயே ஓய்வெடுக்க முடியாது என்று கூறியுள்ளார். எனவே இந்த நெருக்கடியான காலகட்டத்தில் வறுமையை ஒழிக்க அனைவரும் ஒற்றுமையோடு செயற்படவேண்டியது அவசியம். இன்று அது மிக முக்கியமானதாக இருக்கின்றது.

# உடனடி தீர்வு?

என். சத்திய மூர்த்தி



நாடாளுமன்றத்தில் பட்ஜெட் விவாதத்தின் போது, அயலுறவு துறைக்கான ஒதுக்கீடு குறித்து பேசிய எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா, நாட்டை யார் ஆண்டாலும், இனப்பிரச்சினைக்கு உடனடி தீர்வு கிடைக்க வாய்ப்பில்லை என்று கூறினார். என்றாலும், ஒருமித்த இலங்கைக்குள், நாட்டின் இறையாண்மையை பாதுகாக்கும் வண்ணம், அனைத்து இன மக்களும் ஒன்றாக வாழ்வதற்கான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் சஜித் கூறியதற்கும் அயலுறவு துறை அமைச்சர் அலி சப்ரி பேசியதற்கும் அதிக வித்தியாசமில்லை. அமைச்சர் சப்ரி, தனது பதில் உரையில், ஒருமித்த இலங்கைக்கும் அனைத்துத் தரப்பினருக்கும் சம உரிமை கிடைக்கும் என்ற சாரப்பட பேசினார்.

இவை அனைத்துமே, தமிழர்கள் கடந்த தசாம்சங்களில் கேட்டுப் புளித்துப்போன வாதங்கள். அவற்றை விவாதங்கள் என்று கூறி பெருமைப்படுத்தவோ, அல்லது வெறும் விவாதம்தான் என்று சிறுமைப் படுத்தவோ தேவையில்லை.

இருவரில், அலி சப்ரி அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடப்போகிறாரா, அல்லது தற்போதுள்ளது போல், தேசிய பட்டியல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவாரா, என்பன போன்ற கேள்விகள் உள்ளன. ஆனால், சஜித், நாடாளுமன்றம் என்ன, அடுத்து வரும் ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிட தயாராகவே உள்ளார். எனவே, இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த அவரது பேச்சு முக்கியத்தும் வாய்ந்தது.

ரஜினிகாந்தின் அண்ணாமலை படத்தில் ராதாரவி கூறுவது போல், கூட்டிக் கழித்துப் பார்த்தால், சஜித் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டாலும், இனப்பிரச்சினைக்கு உடனடி தீர்வு எதனையும் அவர் முன்வைக்கப்போவதில்லை என்று அவர் இப்போதே அறிவித்துவிட்டார். இந்த அறிவிப்பு, தமிழர் தரப்பைக் குறிவைத்துக் கூறப்பட்டது அல்ல. மாறாக, சிங்களப் பேரினவாதிகளுக்கு அவர் அளித்த உத்தரவாதம்.

அவ்வாறானால், கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமைக்கு சஜித் அளித்த உறுதிமொழி என்னவாயிற்று? அவரைப் பொறுத்தவரையில், கடந்த தேர்தல் தோல்விக்கு, சிங்கள மிதவாதிகள் மற்றும் பேரினவாதிகளின் வாக்கு தனக்கு சரியான விகிதத்தில் கிடைக்கவில்லை என்று கருதுகிறார் போலும்.

உண்மையில், 2019 தேர்தலில் அவருக்கு கிடைத்த 42 சதவீத வாக்குகளில், பெரும்பாலானவை வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழர் மற்றும் முஸ்லீம் வாக்காளர்கள் வழங்கியது. மீதமுள்ளதிலும் கணிசமான வாக்குகள் மலையகத் தமிழர்களிடமிருந்து வந்தது. மொத்தத்தில் அந்த 42 வாக்குகளில் 30 சதவீதம் வரை இந்த மூன்று இனத்தவரது.

### புலம்பெயர்ந்த இலங்கையர்

இது இப்படி என்றால், அண்மையில் தன்னை சந்தித்த ஜி.டி.எப் என்று அறியப்படும் உலகத் தமிழர் பேரவை மற்றும் பௌத்த மதகுருமார்களின் கூட்டமைப்பினரோடு அளவளாவிய சஜித் பிரேமதாசா, குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழர்கள் குறித்து தனது கருத்துக்களை தெரிவித்தார். அவரது கூற்றுப்படி, புலம்பெயர்ந்த தமிழர்கள் என்பதைவிட அனைத்து புலம்பெயர்ந்த இலங்கையர் என்ற எண்ணம் அனைத்து தரப்பினரிடமும் உருவாக வேண்டும் என்றும் கூறினார்.

சஜித் பிரேமதாசாவிற்கு பதிலளித்த ஜி.டி.எப். அமைப்பின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன், புலம்பெயர்ந்தோரின் ஒருமித்த முன்னேற்றத்திற்கு அவர்களது கூட்டு முயற்சி ஒரு முன்னெடுப்பே என்று கூறினார். அந்த வகையில், இங்குள்ள பௌத்த துறவிகளுடன் சேர்ந்து 'இமாலய பிரகடனம்' என்று இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற முன்னெடுப்பை அறிவித்த ஜி.டி. எப். அமைப்பினர், ஏன், புலம்பெயர்ந்த சிங்களவர்களோடு கலந்துரையாடக்கூடாது என்ற கேள்வி எழுகிறது.

தற்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் கண்டு பேசும் ஜி.டி.எப் வகையாறா, பௌத்த மத பீடாதிபதிகளுடனும் கலந்துரையாடினார்கள். அவர்களது கூற்றுப்படி. அந்த மத குருமார்கள், தற்போதைய முயற்சியை ஆதரித்தார்கள். அதாவது, பௌத்த பேரினவாதிகள் அந்த முன்னெடுப்புகளுக்கு முட்டுக்கட்டை போடாமல் பார்த்துக்கொள்வார்கள் அல்லது, அதுதான் அந்த இணை குழுவினரின் எதிர்பார்ப்பு.

உண்மையைச் சொல்லப்போனால், தற்போதைய முயற்சியின் பின்னால், ஜனாதிபதி ரணிலும் அரசும் இருப்பது போலவே தோன்றுகிறது. கடந்த வருடம் ஜனாதிபதியாக பதவியேற்ற பின் லண்டன் சென்ற ரணில், அங்கு ஜி.டி.எப். தலைமையை சந்தித்துப்பேசினார் என்று செய்திகள் தெரிவித்தன. அதற்கு முன்னரே, அந்த அமைப்பு உள்ளிட்ட பல்வேறு புலம்பெயர் தமிழர் குழுக்கள் மீதிருந்த அரசு தடையை அவர் நீக்கி இருந்தார்.

அரசியல் தலைவர்களையும் மத குருமார்களையும் சந்தித்துப் பேசிய இணை குழுவினர், நாடாளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபயவர்தனாவின் ஏற்பாடில் ஒரு சில உறுப்பினர்களையும் சந்தித்து பேசினார். நாடாளுமன்றக் கட்டடத்தில் நடந்த அந்தக் கூட்டத்திற்கு சபாநாயகரே தலைமை வகித்தார் என்றும் செய்திகள் கூறின. இவ்வாறான கூட்டம் அரசின் அனுசரணை இல்லாமல் சபாநாயகர் தன்னிச்சையாக முன்னெடுத்திருப்பார் என்று கருத இடமில்லை.

அதிலும் குறிப்பாக, தற்போதைய சபாநாயகர், மொட்டு கட்சியின் வேட்பாளராகவே தேர்ந்தெடுக்கப்பட்டவர். ராஜபக்ச குடும்பத்தை இன்னும் அனுசரித்துப் போவதாகவே கருதப்படுபவர். அவ்வாறானால், இந்தக் குழுவிற்கு அரச தரப்பின் முழு ஆதரவும் இருக்கிறதா, என்ன?

அந்த விதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப்பேசிய இணைக் குழுவில் அங்கம் வகித்த சுரேன் சுரேந்திரன் தங்களது அமைப்பு தனி நாடு கோரிக்கையை ஆதரிக்கவில்லை என்று தெளிவாக்கி உள்ளார். இது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

### அடிப்படை ஆவணம்

எது எப்படியோ ஜி.டி.எப். அமைப்பினருக்கு இங்குள்ள தமிழர் தரப்பினரோடு உள்ள ஒட்டுறவு எவ்வாறு உள்ளது? இங்குள்ள எந்தவொரு தலைவருடனோ அல்லது சமூக அமைப்பினருடனோகூட இணை குழு பேச்சு நடத்தியதாகத் தெரியவில்லை. அவ்வாறானால், அவர்கள் வெறும் காற்றில்தான் இன்னமும் பந்தடித்து பழகிக் கொண்டிருக்கிறார்களா, என்ன?

இனப் போர் முடிந்த காலகட்டத்தில், ஜி.டி.எப். அமைப்பினருடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு சேர்ந்து பணியாற்றியது. அல்லது அதற்கான முஸ்தீபுகளை இரண்டு அமைப்பினரும் சேர்ந்து முன்னெடுத்தனர். அதற்கு பின்னர், ஜி.டி.எப் அமைப்பிலிருந்து பல்வேறு பிற அமைப்புகளும் பிரிந்து சென்றுவிட்டனர். தற்போதும், அவர்களில் பலரும் ஜி.டி.எப் அமைப்பின் முன்னெடுப்பை விமர்சித்துள்ளனர். அந்த அமைப்பிற்கு புலம்பெயர்ந்தோரிடையே ஆதரவு இல்லை என்றும் தொடர்ந்து அறிவித்து வருகின்றனர்.

அதாவது, ஒருமித்த கருத்துகளின் அடிப்படையில், தமிழர் உரிமைகளுக்காக உள்நாட்டில், கூட்டமைப்பு அரசுடன் பேச்சு நடத்திவந்த தருணத்தில், ஜி.டி.எப். அமைப்பினர், சர்வதேச அளவில் அழுத்தம் கொடுப்பார்கள். அப்போது, எஸ்.ஜே.இமானுவல்

(5ஆம் பக்கம் பார்க்க..)

# தேசிய ஔடத கட்டுப்பாட்டு சபைக்கு சுகாதார அமைச்சர் திடீரென வருகை



தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகாரசபை மற்றும் தேசிய மருந்து தர பாதுகாப்பு ஆணையகம் என்பவற்றைக் கண்காணிப்பதற்காக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண திடீர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன் போது பௌதீக மற்றும் மனித வளங்களை மேம்படுத்து-வதற்காக துரித நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

சுகாதாரம் மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன அண்மையில் தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகாரசபை மற்றும்அதன்கீழ்நிர்வகிக்கப்படும் தேசியமருந்துதரபாதுகாப்புஆய்வு கூடத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகாரசபையில் தற்போது காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் அதன் தலைவர் விசேடவைத்தியநிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம மற்றும் தேசிய மருந்து தர பாதுகாப்பு ஆணையத்தின் பதில் பணிப்பாளர் கௌரி கத்ராராச்சி ஆகியோரால் அமைச்சருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அதன் பின்னர் அவர்களுக்கு ஆலோசனைவழங்கியஅமைச்சர் ரமேஷ் பத்திரண, தேவைக்கேற்ப பணியாளர் திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் அதிகாரசபையின் மனித வளமேம் பாட்டிற்கு உரிய கவனம் செலுத்துமாறும், அதிகாரசபையின் வேலைப்பழுவுக்கு ஏற்றவாறு பதவி நிலைகளுக்கு அனுமதி வழங்குமாறும் குறிப்பிட்டார்.

அதற்கமைய தேசிய மருந்து தர பாதுகாப்பு ஆணையத்தின் அடிப்படை வசதிகள் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மற்றும் தேவையான உபகரணங்கள் தொடர்பான முழுமையான அறிக்கையை விரைவில் தன்னிடம் சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் இதன் போது ஆலோசனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# உடனடி தீர்வு?...

(4ஆம் பக்கம் பார்க்க..)

ஆண்டகை, ஜி.டி.எப். தலைவராக இருந்தார். கூட்டமைப்பு சம்மந்தன் வசம் இருந்தது. அதைவிட முக்கியமாக, கூட்டமைப்பு என்ற அமைப்பு இருந்தது.

இமானுவல் ஆண்டகை, வயோதிபம் காரணமாக தனது அரசியல் முன்னெடுப்புகளை குறைத்துக்கொண்டார். பின் னர், நிறுத்திக்கொண்டார். அண் மைக் காலத்தில், வயோதிபம் காரணமாக சம்மந்தனுடைய வாக்கிற்கும் விலை இல்லை என்று ஆகிபோனது வருதத் திற்குரிய விடயம். அதைவிட முக்கியம், கூட்டமைப்புஎன்றஅரசியல் தளமே காணாமல் போய்விட்டது.

இந்த பின்னணியில் தற்போதைய முன்னெடுப்புகள் யாரை வென்றெடுப்பதற்காக? நிச்சயமாக தமிழர்தரப்பைஅல்ல. அவ்வாறானால், இணை குழு முதலில் தமிழர் தரப்பினருடனல்லவா, புதிய தொடர்பு அல்லது தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

தமிழர் மத்தியில் இருந்து பேசுவதற்கு எந்தவொரு தரப்பும் தயாரில்லை என்றால், அவர்கள் சிங்களத் தரப்பினருடன் பேசி ஒத்தை நாயனம் வாசித்து எதனைச் சாதிக்கப்போகிறார்கள்? வேண்டுமெற்றால், அரச தரப்பு, ரணில் 'இதோ வருகிறது. அதோ வருகிறது' என்று பயமுறுத்திக் கொண்டிருக்கும் தமிழர் தரப்பினருடனான பேச்சுகளுக்கான அடிப்படை ஆவணமாக, இந்த இமாலய பிரகடனத்தைப் பயன்படுத்துமா?

இல்லை, ரணிலின் வழமையான பாணியில், சர்வதேச சமூகத்திற்கு பூச்சாண்டி காட்ட மட்டுமே இந்த இணை குழு வினரையும் அவர்களின் இமாலய அறிக்கையையும் பயன்படுமா?

பொறுத்திருந்து பார்ப்போம்.

# நுரைச்சோலை நிலைய மின்பிறப்பாக்கிகள் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும்!

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் முதலாவது மற்றும் 2 ஆவது மின் பிறப்பாக்கிகள் டிசெம்பர் மாதத்திற்குள் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை நாடளாவிய ரீதியில் திடீரென ஏற்பட்ட மின் தடை காரணமாக நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் முதலாவது மின் பிறப்பாக்கி செயலிழந்தது.

அத்துடன், 2 ஆவது மின் பிறப்பாக்கி தொடர்ந்து செயலிழந்து காணப்படுகிறது. இந்நிலையிலேயே, முதலாவது மற்றும் 2 ஆவது மின்பிறப்பாக்கிகள் இம்மாதத்திற்குள் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் என இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நோயல் பிரியந்த தெரிவித்துள்ளார்.

அதே நேரம் நாட்டில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக நீர் மின் உற்பத்தி அதிகரித்துள்ளதால், இந்நிலைமைகள் மின் உற்பத்தியில் பெரியளவு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
Milk Drink - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

# தேசபந்து தென்னகோன் உட்பட 4 அதிகாரிகளை நஷ்டஈடு செலுத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவு!

பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் மூன்று பொலிஸ் அதிகாரிகளை இவர்களால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு நட்டஈடு வழங்குமாறு உயர் நீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

ஒரு தனிநபரின் அடிப்படை உரிமைகளை மீறியதற்காக அவர்களின் தனிப்பட்ட நிதியிலிருந்து 2 மில்லியன் ரூபாவை நஷ்டஈடாகச் செலுத்த உத்தரவிட்டுள்ளது.

மிரிஹான பொலிஸ் நிலையத்தில் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த சம்பவம் தொடர்பான விசாரணையின்போதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதேவேளை, மனுதாரருக்கு 100,000 ரூபா இழப்பீடு வழங்கவும் அரசுக்கு உத்தரவிடப்பட்டது. மனுதாரரரன டபிள்யூ. ரஞ்சித் சுமங்கல என்பவரை சட்டவிரோதமாக கைது செய்து, தடுத்துவைத்து, சித்திரவதைக்கு உட்படுத்தியதன் மூலம், தேசபந்து தென்னகோனின்மேற்பார்வையின்கீழ்இருந்த மிரிஹான பொலிஸ் நிலையத்தில் அவரது அடிப்படை உரிமைகளை மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உட்பட நான்கு பொலிஸ் அதிகாரிகளையே இவ்வாறு நஷ்டஈடு வழங்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் தொடர்புடைய அஜித் வனசுந்தர (இராணுவத்தின் ஓய்வுபெற்ற சார்ஜன்ட் மேஜர்) என்ற தனியார்தரப்பினரும்பொறுப்புக்கூறப்பட்டு நட்டஈடு வழங்கப்பட வேண்டும்.

மேலும், தேசபந்து தென்னகோன் உட்பட அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழு உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உயர் நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டுள்ளது. (05)



# நடிகை ரம்பா யாழ். வருகை





பிரபல தென்னிந்திய நடிகை ரம்பா தனது குடும்பத்தினருடன் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளார்.

மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோயிலுக்குச் சென்ற அவர், அங்கு விசேட வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

நடிகை ரம்பாவின் கணவர் இந்திரகுமார் பத்மநாதன் யாழ்ப்பாணம் மானிப்பாயை பூர்வீகமாக கொண்ட கனடா முதலீட்டாளராவார். இவரின் முயற்சியால் யாழில் நொதேர்ன் யுனி தனியார் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில்நொதேர்ன்யுனியின் அனுசரணையில் எதிர்வரும் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் முற்றவெளியில் பிரபல தென்னிந்திய பாடகர் ஹரிஹரனின் பிரம்மாண்ட இசை நிகழ்ச்சியொன்று நடைபெறவுள்ளது. (05)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir




# ஈழத்துச் சிதம்பர ராஜாதி ராஜர்



காரை நகர் மண்ணுக்கு தனிச்சிறப்பு உண்டு. சமயப்பிடிப்பில் காரை மக்களுக்கு நிகர் அவர்களே.

பாரம்பரியம் மரபு இவைகளில் ஆழ்ந்த பிடிப்பு, விஸ்தாரமான கிரியை வழிபாடுகளோடு கூடிய ஆலய வழிபாடு இவை எல்லாம் காரை நகரின் தனித்துவங்கள்.

அந்த நகரின் பெருவிழாவான ஈழத்து சிதம்பர திருவாதிரைத் தேரோட்டம் நேற்று நிகழ்ந்தது.

அந்த ரத உத்ஸவத்தின் போது அடாது மழை பொழிந்தாலும் வெள்ளமோடினும் காரை நகர் பக்தர்கள் காட்டும் பக்திமை வியப்பூட்டும்.

இந்த கோயிலின் மரபு வழி சிவாச்சார் யர்களாக விளங்கிய கணபதீஸ்வரக்குருக்கள் போன்றோரும் அதற்கிணையான பக்திமையும் அறிவொழுக்கமும் கொண்டவர்களாக விளங்கினர்.

ராஜாதி ராஜரான நடராஜ ராஜர் ஆனந்த தாண்டவத்தோடு சபையிலிருந்து எழுந்தருளி விட்டால் தேரேறி உலா வந்து மறுநாள் மஹா அபிகேம் கண்டு தீர்த்தவாரி நிகழும் வரை குருக்கள்மார் பசி, உறக்கம் எல்லாம் மறந்து போவார்களாம்.

பல்வேறு பூசுர குடும்பங்களும் தமிழகத்திலிருந்து முதலில் குடியேறிய ஊர் காரைநகர் தான்.

இந்த ஊர் மக்கள் அமைச்சரானாலும் பெரிய பதவிகளை அடைந்தாலும் நெற்றி முழுக்க நீறணிய மறக்க மாட்டார்கள். தங்கள் கோயில் சுவாமிக்கு செய்ய வேண்டியதை, பிதிர்கடமைகளை சரிவரச் செய்வார்கள்.

இத்தகு காரை நகர மக்களின் பெருங்கோ-யிலில் நேற்று தேரேறிய ஆனந்த கூத்தர் இன்று அதிகாலையில் மகா அபிகேம் கண்டு தீர்த்தவாரி காண்கிறார்.

இங்கு காணப்படுகின்ற நடராஜர் திருவுருவம் மிகவும் சிறப்பானது. வியாக்கிரபாதரும், பதஞ்சலியும் நடராஜப்பெருமானின் திருவடியின் இரு மருங்கிலும் தொழுதேத்த, ஐம்பத்தியொரு சுடர்களைக் கொண்ட வட்டத் திருவாசிக்குள் நடராஜப்பெருமான் திருநடனம் புரியும் விதமாக வார்க்கப்பட்டுள்ளது.

இத்திருவுருவத்தை ஈழத்துச்சிதம்பரத்திலேயே தங்கியிருந்து வார்த்துக் கொடுத்தவர் சோழபுரத்துக் குருசாமி ஆசாரியார் அவர்கள்.

மேலே குறிப்பிட்ட நடராசர் திருவுருவம் இந்தியாவிலே ஓரிரு இடங்களிலே மட்டும் காணப்படுவதாக, சிற்பக்கலையில் நிபுணரான தொ.மு பாஸ்கரத் தொண்டமான் கூறியுள்ளார். இவர் 1963 ஆம் ஆண்டு ஈழத்துச் சிதம்பரத்தை தரிசித்த பின்பு அழகும் அற்புதமும் திருவருளும் நிறைந்த நடராசர் திருவுருவத்தைப் பற்றி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இறைவன் புரியும் ஐந்தொழில்களையும் தெளிவாகவும் இலகுவாகவும் ஒருங்கே காட்டுவது நடராஜ வடிவம். சைவ சமய மரபில் சில ராஜாக்கள் உள்ளனர். காவிரித் தென்கரைத் தலத்தில் விளங்கும் பதியாகிய திருவாரூர் தியாகராஜர் ஒரு ராஜா! காவிரியின் வடகரையில் விளங்கும் பதியாகிய சிதம்பரத்தின் நடராஜர் ஒரு ராஜா !

இவ்விரும் ஆதிரையர்கள். அதாவது, இருவருமே ஆதிரை நாளில் விழாக் காண்பவர்கள்.

தில்லையில் ஆனந்த தாண்டவம்.

தியாகரின் நடனம் அஜபா தாண்டவம்.
தில்லை பொற்கோயில் ஆரூர் பூங்கோயில்.

தில்லைப் பெருமான் ஆகாச வடிவினர் என்றால், திருவாரூர் பெருமான் பூமி வடிவினர். இரண்டு இடங்களிலும் ஆயிரம்கால் மண்டபம் உள்ளது.

தில்லையிலும் திருவாரூரிலும் மூலலிங்கத்திற்கு மூலட்டானேஸ்வரர் என்றே பெயர். இருபெருமானும், அடியவர்களின் பெருமையைப் புகழ்ந்து பாட அடியெடுத்துக் கொடுத்தவர்கள். திருவாரூர் பெருமான் சுந்தரருக்கு தில்லைவாழ் அந்தணர் என்று அடியெடுத்துக் கொடுக்க தில்லைக்கூத்தரோ

பெரியபுராணம் பாட உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுத்தார்.

திருவாரூர் பெருமான் தில்லை எனும் சிதம்பரத்தை அடியெடுத்துக் கொடுக்க தில்லையெம்பெருமானோ உலகம் எனும் பிருத்வி தத்துவத்தை (திருவாரூரை) உணர்த்தும் விதமாக அடியெடுத்துக் கொடுத்தார்.

இரண்டு இடங்களிலும் பதஞ்சலி மற்றும் வியாக்கிரபாதர் ஆகிய இருவரும் பாததரிசனம் பெற்றனர்! இந்த வகையில், பார்த்தாலும் ஈழத்துச் சிதம்பரம் என்ற காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில் தனிச்சிறப்பு பெறுகிறது.

இங்கு மார்கழி மஹா உத்ஸவத்தில் தில்லைக் கூத்தர் திருத்தேரில் பவனி வருகிறார். பங்குனி உத்தர மஹோத்ஸவத்தில் தியாகராஜரான சோமாஸ்கந்தர் தேருலாக் காண்கிறார். இங்குள்ள இவ்விரு மூர்த்திகளுக்கும் தனிச்சிறப்புடைய அற்புத வரலாற்றுக்கதைகள் உள்ளன. மூலவரோ மதுரை போல சுந்தரேசுவரராக விளங்குகிறார்.

தவிரவும், மாணிக்கவாசகப் பெருமானைக் கொண்டாடுவதில் காரைநகராருக்கு நிகர் இல்லை. எண்பதாண்டுகள் பழைமையான மா ணிக்கவாசகர் சபை இங்குள்ளது.

கோயில் வசந்த மண்டபத்தில் திருவெம்பாவை காலத்தில் இச்சபையால் நிகழ்த்தப்படும் மணிவாசகர் விழாவும் அவ்வப்போது நிகழ்த்தப்படும் திருவாசக முற்றோதல்களும் புகழ்பெற்றன.

தமிழகத்திலும்காரைக்குடி, காரைக்குறிச்சி, காரைக்கால் என்று பல ஊர்கள் உள்ளன. இலங்கையிலும்கிழக்கில்காரைதீவு உள்ளது.

ஆனால், இந்த காரைதீவு அரச ஆவணங்களிலும் காரைநகர் என்றே பதிவாகியுள்ள தனிச்சிறப்புடையது. அவ்வாறு காரைநகரென அரசாணை பிறப்பிக்கப்பட்டும் இந்த ஆண்டு (1923- 2023) நூற்றாண்டு காண்கிறது.

ஆக, ஊக்கமும் தொழிலார்வமும் மிக்க காரைநகரார் சைவ மரபிலும் மிகுந்த பிடிப்போடு இங்குள்ள ஐயனாரையும் ஆடவல்ல பெருமானையும் போற்றி வளமோடு வாழ்கிறார்கள்.

அந்த ஈழத்துச்சிதம்பர ஆனந்தக் கூத்தர் எங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் ஆனந்தம் தவழ அருளட்டும்!!

இந்த ஆண்டு பாலாலயம் செய்யப்பட்டுள்ள ஈழத்துச்சிதம்பரம் விரைவில் திருப்பணிகள் நிறைவேறி மகா கும்பாபிஷே-கம் காணவும் முன்னைச் சிறப்புகளோடு பெருவிழாக்கள் நிகழ்வும் சிவபெருமான் அருளட்டும் !!

ஹர ஹர மஹா தேவ !!

ஸ்ரீசிவஸ்ரீ.தி.மயூரகிரிசிவாச்சார்யார்

# நன்று நன்று இன்னும் அன்னே நயந்து பிட்டு அளிக்க வேண்டும்



இலங்கையின் தனித்துவமான பாரம்பரியங்களில் ஒன்று திருவெ-ம்பாவைக்கால புராண படனம்.

மாணிக்கவாசகசுவாமிகளின்சரிதம் பேசும் கடவுள் மாமுனிவர் பாடிய &ஸ¬ற்லிமி;திருவாதவூரடிகள் புராணமே இவ்வாறு படனம் செய்யப்படுகிறது.

காலையில் திருவெம்பாவை பூஜையின் தொடர்ச்சியாக உத்ஸவ மூர்த்திகளுக்கு முன் இப்புராண படன நிகழ்ச்சி நடத்தும் வழக்கம் உள்ளது.

இந்த புராணத்தினை பத்து நாட்களும் பகுத்துப் படிப்பர். அப்படி படிக்கும் போது ஆறாம் அல்லது ஏழாம் நாளில் பிட்டுக்கு மண் சுமந்த கதை (மண் சுமந்த சருக்கம்) படிக்கப்படும்.

அந்த நாளில் விசேமாக சர்க்கரைப்பிட்டு அவித்து நெய்வேதித்து அடியார்களுக்கு பிரசாத விநியோகம்செய்வர்.

இப்போதெல்லாம் புராண படனம் பல இடங்களிலும்வழக்கொழிந்து போகிற போதிலும் இந்த ஆறாம் நாள்பிட்டு நெய்வேத்ய வழக்கம் மட்டும் சிறப்பாக பேணப்பட்டு வருகிறது.

ஆக, ஆவணி மூல பிட்டு திருவிழா மட்டுமன்றி திருவெம்பாவை காலத்திலும் எங்கள் நாட்டில் பிட்டுத்திருவிழா கொண்டாடப்படுகிறது.

பெருமானின் அளப்பெரும் கருணையை வெளிப்படுத்தும் இந்த திரு நாளில் அவன் திரு மலரடிகளைபோற்றுவோம்.

எங்கள் மண்ணின் அடையாளமான பிட்டு இறைவன் விரும்பி உண்ட உணவு. எத்தனை புது உணவு வகைவரினும் பிட்டின் இடம் தனியானது தான்..

ஆடையும் துணிந்த சீரையாக்கியே கூலியாளாய்
கூடையும் தலைமேல் கொண்டு கொட்டுடைத் தோளராகிப்
பீடை கொண்டயர்வாள் காணப் பெரும்பசியுடையார் போல
வேடைகொண்டொல்லை வந்தார் வேண்டிய வடிவம் கொள்வார்
வள்ளல் தன் சீற்றம் கண்டு மாறு கோல் கையரஞ்சி
தள்ளரும் சினத்தராகித் தடக்கை தொட்டிழுத்து வந்து
உள்ளொடு புறங்கீழ் மேலாய் உயிர்தொறும் ஒளித்து நின்ற
கள்வனை இவன் தான் என்று வந்திக்காளெனக் காட்டி நின்றார்

மயூரகிரி சிவாச்சார்யார்





# இலகு ரயில் திட்டத்தை விரைவில் தொடங்க ஜப்பானுடன் பேச்சுகள்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்



இலகு ரயில் திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பாக ஜப்பான் அரசாங்கத்துடன் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அதற்கமைய இந்தத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்ப்பதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் திட்டத்தை மீள் மதிப்பீடு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, இதற்காக செலவிடப்பட்ட தொகை முதல் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது.

எவ்வாறாயினும் ஜப்பானுடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி அடுத்த வருடத்தில் பொது வசதிகள் இடமாற்றம் மற்றும் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மீண்டும் செயற்படுத்தப்படவுள்ளன.

இலகுரயில்திட்டத்துக்கானஆரம்பசாத்தியக்கூறு ஆய்வு நடத்தப்பட்டது. மாலபேமுதல்கோட்டைவரையிலான கட்டுமானம் தொடர்பான விரிவான திட்டங்கள், ஒப்பந்த ஆவணங்கள், ஏல ஆவணங்கள் மதிப்பீடுகள் மற்றும் கண்காணிப்பு சேவைகளை வழங்க சர்வதேச ஆலோசனை நிறுவனம் ஒன்று நியமிக்கப்பட்டது. அதன் அடிப்படை வியங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 120 மில்லியன் டொலர்களாகும்.

இந்த பூர்வாங்க பணிகள் 2019 ஏப்ரலில் தொடங்கி 91 மாதங்களில் முடிக்கப்பட இருந்தது. இருப்பினும், 21 மாதங்களுக்குப் பிறகு, அதாவது டிசெம்பர் 31, 2020 இற்குப் பிறகு திட்டத்தை இரத்து செய்ய அப்போதைய அரசாங்கம் தீர்மானித்தது.

இந்தத் திட்டத்திற்கான காணி கையகப்படுத்தும் பணியும் தொடங்கியுள்ளது. இதற்காக அடையாளம் காணப்பட்ட காணியின் அளவு 22 ஹெக்டேயர் ஆகும். பெரும்பாலான காணி கையகப்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

ஆனால்இதுவரைகையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை.

இலகுரக ரயில் சேவை இரத்து செய்யப்பட்டதால், ஆலோசனை சேவைகளுக்காக நியமிக்கப்பட்ட நிறுவனம் கோரிய சேதங்களை ஆய்வு செய்து, எடுக்க வேண் டிய நடவடிக்கைகளை முடிவு செய்ய, அமைச்சரவை பேச்சு குழுவை நியமித்துள்ளது. இதற்கிடையில், ஜைக்கா நிறுவனம்பெற்றகடன்தொகையில்இருந்து திட்டத்திற்காக செலுத்த ஒப்புக்கொண்டது. ஆனால், கடன் செயல்படுத்தப்படாததால் பணம் செலுத்தப்படவில்லை. - என்றார். (05)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாடளாவிய ரீதியில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக பல பிரதேசங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

காலி, பதுளை, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி இந்த ஆண்டில் இதுவரை நாடளாவிய ரீதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 80 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானவர்கள் மேல் மாகாணத்தில்இருந்துபதிவாகியுள்ளனர்எனத்தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (05)

# குடும்ப வன்முறைகளை தடுக்க விசேட ஏற்பாடு

குடும்பங்களில் இடம்பெற்றுவரும் வன்முறைகளைத் தடுக்கும் விதமாக மிது பியச' பிரிவுக்கு விசேட தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளதாகக் குடும்ப சுகாதார பணியகம் அறிவித்துள்ளது.

'070 2 611 111' என்ற குறித்த தொலைபேசி இலக்கத்தின் ஊடான எந்த நேரத்திலும் அழைப்பை ஏற்படுத்தி குடும்பத்தில் இடம்பெறும் வன்முறைகள் குறித்து தெரியப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 'குடும்பங்களில் வன்முறைகள் அதிகரிப்பதற்கு கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் சமூக ஊடகங்களின் பாவனையே பிரதான காரணமாக அமைந்துள்ளதாக' களுபோவில வைத்தியசாலையின் மித்ரு பியசவுக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி ஹோனி கருணாதிலக்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# தேசிய கண் வைத்தியசாலை போராட்டம் இடைநிறுத்தம்

கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் நேற்று (வியாழக்கிழமை) காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வைத்தியசாலையின் பிரதம நிர்வாகியின் முறைகேடுகள் தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமைதமைக்கு எதிராகவே இந்தப் பணிப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# மஹிந்தவிடம் இமாலய பிரகடனத்தை சமர்ப்பித்தது உலகத் தமிழர் பேரவை







முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் உலகத் தமிழ் பேரவை இமாலய பிரகடனத்தைச் சமர்ப்பித்துள்ளது.

உலகத் தமிழ் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் உள்ளிட்ட பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவினர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன் பின்னர் இமாலய பிரகடனத்தை குறித்த குழுவினர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தனர்.

இந்த சந்திப்பு உலகத் தமிழ் பேரவையின் வேண்டுகோளுக்கு இணங்க முன்னெடுக்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



# முக்கிய அறிவிப்புகளை வெளியிடுவார் மஹிந்த

## ரோஹித அபேகுணவர்தன அறிவிப்பு

ராஜபக்சர்களின் எழுச்சியைக் கண்டு எதிரணியினர் அச்சமடைந்துள்ளார்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நாட்டு மக்களுக்கு முக்கிய அறிவிப்பை வெள்ளிக்கிழமை வெளியிடுவார் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

களுத்துறை பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அரசியல்ரீதியில்தோற்றுவித்தநெருக்கடிகளால்பாரிய விளைவுகளை எதிர்கொண்டோம். அரசமைப்பின் ஊடாகத் தீர்வுகண்டுள்ளோம். கோட்டாபய ராஜபக்ஷ இல்லை என்பதற்காக நாங்கள் அரசியலில் ஈடுபட கூடாது என்பதொன்றும் கட்டாயமல்ல.

பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய மாநாடு கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெறவுள்ளது. ராஜபக்ஷர்களின்மீளெழுச்சியைக் கண்டு எதிர்க்கட்சியினர் அச்சமடைந்துள்ளார்கள். சமூக வலைத்தளங்களில் வெறுக்கத்தக்க வகையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

முன்னாள்ஜனாதிபதிமஹிந்தராஜபக்ஷமீதுநாட்டு மக்கள் இன்றும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். அவரது தலைமைத்துவத்திலான அரசாங்கத்தைக் கோருகிறார்கள். இன்றைய தேசிய மாநாட்டில் அவர் முக்கிய செய்தியை நாட்டு மக்களுக்கு வழங்குவார்.

அரகலய என்று குறிப்பிட்டுக்கொண்டு தோற்றம் பெற்ற போராட்டத்தை அடக்குவதில் கோட்டாபய ராஜபக்ச தோல்வியடைந்தார். அதனால் தான் பாரிய நெருக்கடிகள் தோற்றம் பெற்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராட்டத்தைச் சிறந்த முறையில் அடக்கினார். நாட்டு மக்களை மேன்மேலும் நெருக்கடிக் குள்ளாக்கும் வகையில் வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ளமை முறையற்றதாகும். ஜனாதிபதியின் வரி விதிப்பு கொள்கைக்குத் துணை போகக் கூடாது என்பதற்காக வற் வரி மீதான வாக்கெடுப்பில் நான் கலந்துகொள்ளவில்லை. - என்றார். (05)



# கஞ்சாவுடன் இரண்டு பேர் சாவகச்சேரியில் கைது

## வாகனமும் பறிமுதல்

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சுமார் 07 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் பயணித்த வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பகுதியில் இருந்து கேரளா கஞ்சாவை கடத்தி வருவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், சாவகச்சேரி பகுதியில் பொலிஸாருடன் இராணுவ புலனாய்வாளர்களும் இணைத்து மேற்கொண்ட நடவடிக்கையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்த வாகனத்தை மறித்து சோதனையிட்ட போதே, வாகனத்தில் இருந்து 07 கிலோ கஞ்சாவை மீட்டுள்ளனர். அதனையடுத்து, வாகனத்தில் பயணித்த இருவரையும் கைது செய்த பொலிஸார், கைது செய்யப்பட்டவர்களையும் வாகனம் மற்றும் கஞ்சாவையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர். (05)

# பாணம கடலில் காணாமல்போயுள்ள சிறுவனைத் தேடும் பணிகள் தீவிரம்

பாணம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடலில் நீராடிய சிறுவன் கடலில் காணாமல்போயுள்ளபப் எனக் கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்து அப்பகுதியில் தோடுதலில் ஈடுபடுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு காணாமல்போன சிறுவன் கம்பஹா - கணேமுல்ல பிரதேசத்தை சேர்ந்த 15 வயதுடைய சிறுவராவார். குறித்த சிறுவன் கணேமுல்ல பிரதேசத்திலுள்ள விகாரையொன்றின் சில தேரர்கள் மற்றும் மேலும் சில நபர்களுடன் கடலில் நீராடிக்கொண்டிருந்த போதே காணாமல் போயுள்ளார். காணாமல்போன சிறுவனைத் தேடும் பணியில் பொலிஸ் கடல் பாதுகாப்பு பிரிவினர் மற்றும் பிரதேசவாசிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பாணம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவானதாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

காலைக்கதிர்
Kalaikkathir




## மெதகதுர ஓயா பாலம் இடிந்து வீழ்ந்து இரு பெண்கள் காயம்

உமா ஓயாவின் கிளை நதியான மெதகதுர ஓயாவின் குறுக்கே நிர்மாணிக்கப்பட்ட பாதுகாப்பற்ற கொங்கிரீட் பாலம் கடும் மழை காரணமாக இடிந்து வீழ்ந்துள்ளதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது ஹப்புத்தளை, மெதகதுர பிரதேசத்தை சேர்ந்த 65 மற்றும் 54 வயதுடைய இரு பெண்கள் காயமடைந்துள்ளனர் என வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார்.

குறித்த பாலத்தின் மீது இந்த இரண்டு பெண்களும் வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்த போதே பாலம் உடைந்து ஓயாவில் வீழ்ந்துள்ளது.(05)

## கொலன்னாவையில் ஒருவரை சுட்டுக் கொல்வதற்கு முயற்சி

### இருவர் கைது

கொலன்னாவ பிரதேசத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு ஒருவரைக் கொலை செய்ய முயற்சித்த சம்பவம் தொடர்பில் இரு சந்தேக நபர்களை அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கொலன்னாவ மற்றும் தெமட்டகொட பிரதேசத்தில் வசிக்கும் 25 வயதுடைய சந்தேக நபர்கள் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அங்கு சந்தேக நபர்களிடம் 7 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

மேலதிக விசாரணைகளில் மோட்டார் சைக்கிள்கள், 2 மன்னா கத்திகள், ஒரு பொம்மை கைத்துப்பாக்கி, 7 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 2 தலைக்கவசங்கள் மற்றும் அவர்கள் அணிந்திருந்த ஜாக்கெட்டுகள் என்பன கைப்பற்றப்பட்டன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல்மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி. புலமைப்பரிசில் மாணவன் கௌரவிப்பு



கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் 7 வருடங்களுக்குப் பின்னர் தரம் - 5 புலமைப் பரிசிலில் அகிலன் ஆகாஷ் என்ற மாணவன் 175 புள்ளிகளைப்பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இந்த மாணவனுக்கு பல்வேறு அமைப்புக்களின் உதவிக்கரத்தில் மிகப் பிரமாண்டமான கௌரவிப்பு நிகழ்வும் ஒளி விழாவும் நேற்று (வியாழக்கிழமை) பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை முதல்வர் திருமதி சைலினி பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அலுவலக ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் முரளிதரனும், சிறப்புவிருந்தினராக பங்குத் தந்தை திருச்செல்வம் அடிகளாரும் கௌரவ விருந்தினராக சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்களான ஊடகவியலாளர் லயன் சி.ஹரிகரன், தொழிலதிபர் லயன் க.டினேஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனுக்கு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தால் சைக்கிள் ஒன்றும், சுன்னாகம் லயன்ஸ் கழகம், கிருபா லேனேர்ஸ், சித்திவிநாயகர் புத்தகசோலை, ஸ்தாபகர் குடும்பம், ஹரேகிருஸ்ணா ஆலயம், கூட்டுறவு இன்சூரன்ஸ் ஆகியோரால் நிதியுதவி மற்றும் பரிசுப் பொருள்களும் வழங்கப்பட்டன.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# யாழில். மயங்கி விழுந்த இரு முதியவர்கள் இறப்பு

யாழ்ப்பாணத்தில், புதன்கிழமை இருவேறு இடங்களில் திடீரென மயங்கி விழுத்த முதியவர்கள் உயிரிழந்துள்ளனர். சங்கானை பகுதியில் உள்ள அரைக்கும் ஆலையில், அரைக்க கொடுத்து விட்டு, கதிரையில் காத்திருந்தவர் திடீரெனமயங்கிவிழுந்துள்ளார்.

அவரை மீட்டு சங்கானை பிரதேச வைத்தியசாலையில் சேர்த்த போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பொன்னாலை மேற்கு சுழிபுரத்தை சேர்ந்த இரட்ணம் அருளானந்தம் (வயது 69) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அதேவேளை பலாலி பகுதியில் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த வேளை மயங்கி விழுந்த முதியவரை வீதியால் சென்றவர்கள் மீட்டு, தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்த்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். புன்னாலை கட்டுவான் வடக்கை சேர்ந்த செல்வம் சிவானந்தம் (வயது 81) என்பவரே உயிரிழந்துள்ளார். (05)

# விமானத்தில் ரூ. 50 லட்சம் பெறுமதியான அமெ. டொலர்களை திருடிய சீன பிரஜை

விமானத்தில் வர்த்தகர்களுக்காக ஒதுக்கப்பட்ட பிரிவில்பயணித்தலெபனான்பிரஜையிடமிருந்து50 லட்சம்ரூபாபெறுமதியானஅமெரிக்கடொலர்களைத்; திருடியதாகக் கருதப்படும் சீன பிரஜை ஒருவர் தலைமறைவாகியுள்ளார் எனக் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட வர்த்தகர் 47 வயதுடைய லெபனான் பிரஜையாவார்.

இவர் தனது தாயின் வைத்திய சிகிச்சைக்காக தாயுடன் ஓமான் ஏர்லைன்ஸ் விமானத்தின் மூலம் புதன்கிழமை காலை 7.20 மணி யளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இவர் விமானத்தில் பய ணிக்கும் போது இரவு நேர பயணம் என்பதால் அனைவரும் உறங்கிக்கொண்டிருந்துள்ளனர். இதனால் விமானத்தின் விளக்குகளும் அணைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்குறித்தவர்த்தகரின்பயணப்பையை திறந்து 50 லட்சம் ரூபா பெறுமதியான 14 ஆயிரம் அமெரிக்க டொலர்களைத் திருடியுள்ளார்.

இதனை அறியாத வர்த்தகர் விமானத்திலிருந்து இறங்கி கட்டுநாயக்க விமான நிலைய முனையத்தில் அமெரிக்க டொலர்களை இலங்கை பணத்திற்கு வங்கியில் மாற்ற முற்பட்ட போது பணம் திருடப்பட்டதை அறிந்துள்ளார்.

இது தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியதையடுத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் தலைமறை வாகியுள்ள சீன பிரஜை தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

Tourism Northern Province
synamon global
தமிழ் 99.5 99.7
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather More Social More Business
IDEA FACTORY




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.12.2023இல் வெளியிடப்பெற்றது.